**01. விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**1.1 2011.03.01ம் திகதியிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட 03(01) 2009ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.**

**1.2 கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்று தற்போது கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கடமைபுரிபவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.**

(அ) ஆரம்பக் கல்வியில் ஆசிரியர் பயிற்சி / கல்வியியற் கல்லூரி ஆரம்பப்பயிற்சி / பட்டம் பெற்று தற்போது தரம் 3 முதல் 5 வரையுள்ள வகுப்புகளில் கற்பித்தல் கடமையில் ஈடுபடும். 3 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை கொண்ட ஆசிரியராயிருத்தல்.

(ஆ) கடந்த காலங்களில் புலமைபரிசில் பரீட்சையின் மதிப்பீட்டுக் கடமைகளில் சம்பந்தப்பட்ட ஆரம்ப கல்வி பாடத்திட்டத்திற்குரிய ஆசிரிய ஆலோசகர் சேவையின் அலுவலராயிருத்தல்.

1.3 இல 09 ஐப் பூரணப்படுத்தும்போது பாடநெறியைக் குறிப்பிடல் கட்டாயமாகும். உதாரணம்: ஆரம்பநெறி/ விஞ்ஞானம்/ கணிதம் என்றவாறு

1.4 **விண்ணப்பப்படிவத்தின் 12ஆம் 13ஆம் பந்திகளைப் பூரணப்படுத்தும்போது 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதனை தெளிவாக (✓) அடையாளமிட்டு குறித்துக்காட்டுக. அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

* **தற்போது உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுமாயின் அல்லது நீங்கள் பரீட்சைக் கடமைகளில் இருந்து தடைசெய்யப்பட்டிருப்பின் இப்பதவிக்கான விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க முடியாது.**

**1.5 குடும்ப உறுப்பினர் எனப்படுவோர் - உங்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், உங்களினதும் துணைவரினதும் சகோதர சகோதரிகளும், அவர்களது பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் ஆவர்.**

**1.6 ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் (Online) அதிபரினால் சான்றுபடுத்தப்பட்டு, நிகழ்நிலை முறையில் இத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.**

1.7 மேற்படி பரீட்சையின் மதிப்பீட்டு நிலையங்கள் கீழ்வரும் நகரங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 20 | பதுளை | 33 | சிலாபம் | 46 | மொனராகலை |
| 02 | மகரகம | 22 | மஹியங்கனை | 35 | அநுராதபுரம் | 47 | அம்பாறை |
| 07 | அவிசாவளை | 23 | அம்பலங்கொட | 36 | பொலன்னறுவை | 48 | கல்முனை |
| 08 | ஹொரண | 24 | எல்பிட்டி | 37 | திருகோணமலை | 50 | மட்டக்களப்பு |
| 10 | களுத்துறை | 25 | காலி | 38 | கேகாலை | 51 | வவுனியா |
| 12 | நீர்கொழும்பு | 26 | அக்குரஸ்ஸ | 39 | பேராதெனிய | 53 | யாழ்ப்பாணம் |
| 13 | கம்பஹா | 27 | மாத்தறை | 41 | கண்டி | 54 | நெல்லியடி |
| 14 | நிட்டம்புவ | 28 | தங்காலை | 42 | மாத்தளை | 55 | கிளிநொச்சி |
| 15 | இரத்தினபுரி | 30 | குருநாகல் | 44 | நுவரெலியா | 56 | புத்தளம் |
| 17 | அம்பிலிபிட்டிய | 31 | நிக்கவரெட்டிய | 45 | ஹட்டன் | 57 | தம்புள்ள |
| 19 | பண்டாரவளை | 32 | குளியாப்பிட்டி | | | | |

**குறிப்பு : போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது. எனவே இரண்டாவது தெரிவையும் குறிப்பிட வேண்டும்.**

1.8 **மதிப்பீட்டுப் பணிக்காக அலுவலக முகவரிக்குக் கிட்டிய மதிப்பீட்டு நிலையங்கள் இரண்டிற்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.** அந்த நகரங்களில் குறித்த பத்திரத்துக்கான மதிப்பீட்டுக் குழுக்கள் அல்லது போதியளவு வெற்றிடங்கள் இல்லாவிடின் வேறு கிட்டிய மதிப்பீட்டு நிலையத்திற்கு நியமனம் வழங்கப்படும்.

1.9 இவ்விண்ணப்பப்படிவத்தின் 15 ஆம் பந்தியைத் தவிர்ந்த ஏனையவற்றைப் பூர்த்தி செய்தபின் அதிபரிடம் / நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கவும்.

**02. உறுதிப்படுத்தும் அலுவலர் :**

ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை அதிபராலும், ஆசிரியர் ஆலோசகர்கள் வலயத்தில் பணியாற்றுவார்களாயின் வலயக் கல்விப் பணிப்பாளராலும் கோட்டத்தில் பணியாற்றுவார்களாயின் கோட்டக் கல்வி பணிப்பாளர்களாலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**03. உறுதிப்படுத்தும் அலுவலருக்கான அறிவுறுத்தல்கள் :**

3.1 இப்படிவத்தில் விண்ணப்பதாரியால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா என்பதைக் கவனமாகப் பரிசீலிக்கவும்.

3.2 மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென 3 ஆம் பக்கத்திலுள்ள உரிய இடத்தில் கட்டாயமாக உறுதிப்படுத்துக.

3.3 மேலே இல. 15 (i) இல் (i) முதல் (iv) வரையான விவரங்களின் கீழ் விண்ணப்பதாரி பற்றிய உங்கள் கணிப்பை உரிய கூடுகளில், பின்வருவனவற்றுள் தகுந்த குறியீட்டால் அடையாளப்படுத்துக.

**A** - சிறப்பானது **B** - நன்று **C** – சாதாரணம் **W** - திறமையின்மை

இது அந்தரங்க அறிக்கையாகும். பூரணப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பப்படிவங்களையும் உறுதிப்படுத்திய பின் கோவைப்படுத்தப்பட்ட உரிய இணைப்புகளுடன் தமது அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

புதியவிண்ணப்பதாரிகளினதும்பாடசாலைஆசிரியர்கள்அல்லாதசகலவிண்ணப்பதாரிகளினதும்நிகழ்நிலைமுறையில்தகவல்கள்சரியானஇல்லாத அனுபவசாலிகளான விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவங்களை இணைப்புக்களுடன் (குறித்த சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன்) பட்டியற்படுத்தி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்'விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள், **தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2025'** எனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சகல விண்ணப்படிவங்களையும் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2025.06.27 என்பதைக் கவனத்திற் கொள்க.**

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல - 1503,
கொழும்பு.

**குறிப்பு :** சரியான தகவல்களை முன்வைக்கத் தவறின் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு வாய்ப்பு கிடைக்காது போக சந்தர்ப்பம் உள்ளது . எனவே தகவல்களைச் சரியாகப் பூர்த்தி செய்து மீளவும் பரீசித்து விண்ணப்பிக்கவும்.

tamilguru.lk